
# பிறந்தநாள் வாழ்த்து!



## 12-08-2023

ஆசிரியர் எனும் அருந்தவப் பணியில் தொடங்கி,
பேராசிரியராகப் பெருமையும் கொண்டு நடந்து,
முதல்வராக, பணி நிறைவு கொண்ட எங்கள்,
பெருமைகொள் அண்ணன் **ஜானகிராமன்** தாமும்,

அருந்தவமாய் **விஸ்வலிங்க பெரியப்பா** தமக்கு,
சீர்மிகு மகனாய்ப் **பிறந்த நன்நாள்** இன்று!
உறவுகள் தமக்குள் அண்ணன் பெயரை
அன்புடன் சொல்வதோ **சந்தானம்** என்றே!

அண்ணியார் **கண்ணகி** தன்னைக் கைத்தலம்
பற்றியே மக்கள் இருவரைப் பெற்று மகிழ்ந்தார்!
இன்றோ அண்ணன் தனக்கு **பிறந்த நாளாம்!**
அகவை **எண்பத்தி ஒன்று** நிறைந்திட மகிழ்ந்து,

இனிவரும் காலத்தில் பிணியற்று, மகிழ்வுடன்,
நிறைந்து வாழ்ந்திட இறைவனை வேண்டிநின்று
இவ்வினிய நாளில் மனமுவந்து வாழ்த்துகிறோம்!
வல்லவன் இறைவன் அருளால் வாழ்க நிறைந்து!!

**வாழ்த்தி மகிழும் நெஞ்சங்கள்,**
**கு. ப. அசோகன்,**
**& மங்கையர்க்கரசி,**
சென்னை - 73

